முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதியடிகள் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.04.2024,** வியாழக்கிழமை

1. வள்ளலாய் வாழுகின்ற ஞானியே
வரம் தந்து காக்கும் தவசியே
எல்லா வளமும் வையகம் பெற
ஏழாம்படை வீடு படைத்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென குரோதி தகர் திங்கள்
விய திகதியதும் குருவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 12 ம் நாள், 25.04.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் அப்பூதியடிகள் யானும்
வையகம் நலம்பெற உரைப்பேன்
சோரமிலா ஞானவான்கள் படை
செகமெங்கும் உருவாக வேண்டி
4. வேண்டியே அரங்கமகான் வழி
வேலவனார் அனுகூலம் தர
தொண்டென உலக மக்கள்
தேசிகனை தொடர்ந்து வர
5. வருகவே மக்களை ஞானபலம்
வரமாகச் சூழ்ந்து இனிதே
தரும குணம் கொண்டவர்களாக
தரணி காக்கும் சேவை ஆற்ற
6. ஆற்றத் தூண்டி உலகில்
அளவிலா அறம் தருமப் பணி
மாற்றமாகத் தந்து வளர்த்திட
மண்ணுலகில் வறுமை பிணி விலகி
7. விலகி பலமும் நல்ல வளமும்
வினவிட இயற்கை பாதுகாப்பும்
கலகமிலா அமைதிப் போக்கும்
கண்ணியமும் மக்களிடை பெருகி

8. பெருகியே ஞானவான்களெனும்
பெருமைமிக்க அடையாளம்
வருமுலகில் மக்களெல்லாம் கண்டு
வையகத்தை நல்வழி நடத்தும்

9. நடத்தும் சக்திகளாக மாறுவர்
ஞான ஆட்சி படைக்கும் வண்ணம்
தடையின்றி கட்டமைப்பு படைத்து
தரணியில் விழிப்புணர்வு கூட்டி

10. கூட்டியே மாற்றம் படைப்பர்
குருமார்க்கமென உலகமக்களை
கட்டுக்குள் ஞானமாக இணைத்து
கலியிடர்களை வெல்ல அருள்வர்

11. அருள்மிகு அரங்கன் மார்க்கமே
அபயமென வரும் மக்களை தேற்றி
இருள் போக்கி வழிகாட்டி மீட்டு
எங்கும் பாதுகாப்பான தலைமை தரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–